மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 107/2013

பெயர் : பழனிச்சாமி
சாட்சி – பி.வா.சா–4 நாள்: 16.03.2026

---

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)**

1. இந்த வழக்கினை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கினை யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். கிட்டுசாமி எனது அண்ணன் உறவுமுறை ஆவார். கிட்டுசாமி எனது உறவினர் என்ற விவரத்தை எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். தாவா சொத்து பெரிய மாரப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று சொல்லும் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து பெரிய மாரப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்ற விவரத்தை எனக்கு யார் சொன்னார்கள் என்றால் மாரப்ப கவுண்டர் எனது அப்பாவிடம் சொல்லும் போது நான் உடன் இருந்தேன். மாரப்பகவுண்டர் எப்போது எனது அப்பாவிடம் சொன்னார் என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு சொன்னார்.

2. கிட்டுசாமியின் அப்பா மாரப்ப கவுண்டர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. மாரப்ப கவுண்டர் எப்போது எனது அப்பாவிடம் சொன்னார் என்றால், எங்கள் வீடும் அவர்கள் வீடும் பக்கத்து பக்கத்து வீடு, அப்போது மாரப்ப கவுண்டர் வீட்டில் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது சொன்னார். என்ன பேசிக் கொண்டார்கள் என்றால் இடத்தை தான் வாங்கியுள்ளதாக மாரப்ப கவுண்டர் எனது அப்பாவிடம் சொன்னார். அப்போது எனக்கு வயது சுமார் 25 இருக்கும். மாரப்ப கவுண்டர் வீட்டில் எனது அப்பாவுடன் அவர் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் இடத்தை வாங்கி உள்ளதாக எனது அப்பாவிடம் சொன்னார் என்ற விவரத்தை எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் சொல்வது

தவறு என்றும் அவ்வாறு எனது முதல் விசாரணை சாட்சியத்தில் நான் எதையும் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3. பெரிய மாரப்ப கவுண்டருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது அவருக்கு அவர் தம்பி உள்ளார் என்ற விவரம் மட்டும் தெரியும். அவருடைய தம்பி எங்கு உள்ளார் என்றால் அவரது பக்கத்தில் தான் வசித்து வந்தார். அவரது தம்பியின் பெயர் சின்ன மாரப்ப கவுண்டர் என்றால் சரிதான். சின்ன மாரப்ப கவுண்டர் மற்றும் பெரிய மாரப்பா கவுண்டர் வீடுகள் வேறு வேறு என்றால் சரிதான். பெரிய மாரப்ப கவுண்டருக்கு திருமணம் ஆன விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பெரிய மாரப்ப கவுண்டர் அவரது மகள்களை எங்கு திருமணம் செய்து வைத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4. 1, 2 பிரதிவாதிகளின் தாயார் பெரிய மாரப்ப கவுண்டருக்கு என்ன உறவு முறை என்றால் அவர்கள் உடன் பிறந்த சகோதரிகள் ஆவார்கள். தாவா சொத்தின் புல எண் என்ன என்றால் க.ச.89/2 ஆகும். தாவா சொத்திற்கு உண்டான வருவாய் ஆவணங்களை நான் பார்த்ததில்லை. எந்த அடிப்படையில் தாவா சொத்தின் புல எண் 89/2 என்று நான் சொல்கிறேன் என்றால் 30 வருடங்களுக்கு முன்பாக எனது அப்பாவிடம் மாரப்ப கவுண்டர் பேசிக் கொண்டிருக்கும் போது சொன்னார். அப்போதுதான் தாவா சொத்தின் விஸ்தீரணம் 80 சென்ட் என்றும் சொன்னார். எங்கு சென்று கிரைய பத்திரம் எழுதியதாக சொன்னார் என்றால் சூலூர் சார் பதிவாளர் அலுவலகம் சென்று எழுதியதாக சொன்னார். அந்த பத்திரத்தை எனது அப்பாவிடம் காண்பித்தாரா என்று எனக்கு தெரியாது. நான் பார்க்கவில்லை. அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது காட்டவில்லை.

5. பெரிய மாரப்ப கவுண்டர் சொத்தினை வாங்கும் போது அவர்களது வாரிசுகளையும் சேர்த்து வாங்கியதாக சொன்னாரா என்றால் எனக்கு தெரியாது. பெரிய மாரப்ப கவுண்டர் மற்றும் சின்ன மாரப்ப கவுண்டர் ஆகியோர்களையும் சேர்த்து அவர்கள் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் ஐந்து பேர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பூர்வீகம் வேலாயுதம்பாளையம் கிராமம் ஆகும். நான் வேலாயுதம்பாளையம் கிராமத்தில் தான் வசித்து வந்தேன் என்பதை காண்பிப்பதற்கு உண்டான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வாக்காளர் அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேன்.

6. 30 வருடங்களுக்கு முன்பாக எனது அப்பாவிடம் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் மாரப்ப கவுண்டர் பேசிக்கொண்டிருந்தார் என்றும், அப்போது சொத்து வாங்கியுள்ளதாக அவரிடம் சொன்னார் என்றும், நான் அப்போது அங்கு இருந்து கேட்டதாக சொல்வது உண்மை அல்ல என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தயார் செய் செய்துள்ளார்கள் என்றும், அவர்கள் எனது நெருங்கிய உறவினர்கள் என்பதால் அவர்கள் சொல்லிக் கொடுத்தவாறு நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பெரிய மாரப்ப கவுண்டர் அவரது இறுதி காலத்தில் வேலாயுதம்பாளையம் கிராமத்தில் வசிக்கவே இல்லை என்றும், அந்த சமயத்தில் கிட்டுசாமி குடும்பத்தார் உதவி செய்து வந்தார்கள் என்றும் சொல்லியுள்ளது பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

7. 1, 2 பிரதிவாதிகள் பெரிய மாரப்ப கவுண்டரின் சொத்தினை எந்த காலத்தில் அனுபவித்ததே கிடையாது என்றும், அவ்வாறு அனுபவித்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது பெரிய மரப்ப கவுண்டரின் புகைப்படத்தை காண்பித்தால் என்னால் அவரை அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியாது. எனது வாழ்நாளில் நான் பெரிய மரப்ப கவுண்டரை பார்த்ததே கிடையாது என்றும், அதனால் தான் என்னால் அடையாளம் காட்ட முடியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் நம்பக்கூடியதாகவும், ஏற்கக் கூடியதாகவும் இல்லை என்பதால் எனது சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.03.16 18:14:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.